මිහිරි සරුඵල

இனிமையான வெற்றி

Sweet Success



වාර්ෂික ගිණුම් වාර්තාව -2014

வருடாந்த அறிக்கை -2014

Annual Report -2014

සීමාසහිත ලංකා සීනි සමාගම

லங்கா சீனி நிறுவனம் விமிட்டெட்

Lanka Sugar Company (Private) Limited.



லங்கா சீனி கம்பெனி (பிரைவேட்) லிமிட்டட்

வருடாந்த அறிக்கை

2014

27, மெல்போர்ன் எவனியு, கொழும்பு 4, சிரிலங்கா. தொலைபேசி: +94 11 523 2583 பெக்ஸ்: +94 11 250 0674 மின்அஞ்சல்: Infosugarsrilanka@gmail.com


இன்பகரமான வெற்றியின்
பயணத்தின் ஆரம்பம்.

உள்ளடக்கம்

எமது தத்துவம், நோக்கு, குறிக்கோள்கள், மூலோபாயங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு	4
நிதி மற்றும் செயற்பாட்டு சிறப்பம்சங்கள்	6
தலைவர் கூற்று	8 -9
பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் கூற்று	10
இடர் முகாமைத்துவம்	12
எமது காலாச்சாரம் மற்றும் விழுமியங்கள்	14
உள்ளகக் கணக்காய்வாளர் அறிக்கை	15
பணிப்பாளர் சபை மற்றும் அவர்களது சுயவிபரம்	17 - 19
மூத்த முகாமைத்துவக் குழு மற்றும் நிறுவனக் கட்டமைப்பு	21 - 25
சிரேஷ்ட முகாமைத்துவக் குழு மற்றும் நிறுவகக் கட்டமைப்பு	26 - 27
சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை	28
நிதி நிலைமை கூற்று	29
உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று	30
காசுப் பாய்ச்சல் கூற்று	31
நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்	32 - 52
கூறாக்கப்பட்ட நிதி தகவல்கள் - பெல்வத்த மற்றும் செவனகல	53 - 60
வரைபடங்களுடன் கூறாக்கப்பட்ட ஒப்பீடு - பெல்வத்த மற்றும் செவனகல	61
முன்னேற்ற அறிக்கை	62 - 65
பதிலாள்	66
கூட்டமைப்புத் தகவல்	67

எங்கள் தத்துவம்

கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் மூலம் மற்றும் அதிலிருந்து கரும்பு உற்பத்தி சார்ந்த வேளாண்மை மற்றும் கைத்தொழிலுடன் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வரும் கமக்காரர்களது சமூக - பொருளாதார அந்தஸ்தை அதிகரித்து தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

எங்கள் தொலைநோக்கு

2025 ஆம் ஆண்டளவில் சீனி உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்

எங்கள் நோக்கங்கள

பணி இலக்கு 333 - குறுகிய கால நோக்கங்கள் (2017 அளவில் 3 வருடங்கள்)

1). 80,000 மெட்ரிக் தொன் சீனி உற்பத்தியை அடைதல்.
2). 15,000 விவசாயக் குடும்பங்களுக்கு ஆதரவளித்தல்.
3). 8000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புக்களை வழங்குதல்.
4). விவசாயக் குடும்ப நிகர வருமானத்தை மாதத்திற்கு ரூபா.30,000 ஆக அதிகரித்தல்.
5). தேசிய சீனித்தேவையின் 15மூ பங்களிப்புச் செய்தல்.
6). நிகர இலாபமாக 3 பில்லியன் ரூபாவை அடைதல்.
7). 20 பில்லியன் ரூபா அந்நிய செலாவணியைச் சேமித்தல்.
8). 30 மெகாவோட்ஸ் மின்சக்தியை உற்பத்தி செய்தல்.

பணி இலக்கு -666- நீண்டகால நோக்கங்கள் (2021 அளவில் 06 வருடங்கள்)

1). 240,000 மெட்ரிக் தொன் சீனி உற்பத்தியை அடைதல
2). 40,000 விவசாயக் குடும்பங்களுக்கு ஆதரவளித்தல்
3). 18,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புக்களை வழங்குதல்
4). விவசாயக் குடும்ப நிகர வருமானத்தை மாதத்திற்கு 40,000 ரூபாவாக அதிகரித்தல்.
5). நிகர இலாபமாக 7 பில்லியன் ரூபாவை எட்டுதல்.
6). 16 பில்லியன் ரூபா அந்நிய செலாவணியைச் சேமித்தல்.
7). 75 மெகா வோட்ஸ் மின்சக்தியை உற்பத்தி செய்தல்.

மூலோபாயங்கள்

1). வெளிவளர்ச்சி சார்ந்த வளரும் மாதிரி
2). நன்றாக விளையும் வகைகளுடனான விளைச்சலை விருத்தி செய்தல் வினைத்திறன்மிக்க விஸ்தரிப்பு சேவைகளுடனான சிறந்த கமத்தொழில் செயல்முறைகளை மேற்கொள்ளல் மற்றும் விவசாயிகளுக்கான சிறந்த பலன்களை உறுதிப்படுத்துதல்.
3). அளவுகள் மற்றும் நல்ல ரக உற்பத்தி உபகார கொடுப்பனவுகள் மூலம் பயிர்ச் செய்பவர்களுக்கு ஊக்கம் அளித்தல்
4). உத்தியோகத்தர்களை செயலாற்றுகை சார்ந்த திட்டங்கள் மற்றும் உற்பத்தித் திறன் மீதான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மூலம் ஊக்குவித்தல்.

ஆய்வு மற்றும் அபிவிருத்தி

இலங்கை சீனி ஆராய்ச்சி நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து கரும்பு மற்றும் சீனி உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கம்பனி சமூகக் கடப்பாடு

நாம் கரும்புச் செய்கையாளர்களின் வருமானப் பெறுமானங்களை அதிகரிக்கவும் சமூகத்தினதும் நாம் தொழிற்பட்டு வரும் சுற்றாடலுக்குமான பெறுமானத்தைச் சேகரிக்கவும் வேண்டுமென நாம் நம்புகின்றோம்.




இனிப்பான வெற்றிக்கான
வளம்மிக்க செல்வம்

இலங்கை சீனிக்கம்பெனி பிரைவட் லிமிடெட்

நிதிசார் மற்றும் தொழிற்பாடு சார்ந்த முக்கிய அம்சங்கள் -2014

(தொகைகள் மில்லியன் ரூபாய்களில் அமைந்துள்ளன)	2014	2013
நிதிசார் முக்கிய அம்சங்கள		
வியாபார மொத்தப் பெறுமதி	5,539.31	5,747.05
விற்பனைச் செலவு	(4,904.06)	(3,833.75)
மொத்த இலாபம	635.25	1,913.30
வரிவிதிப்புக்கு முன்னரான நிகர இலாபம்	(211.01)	1,345.72

தொழிற்பாடுசார் செயலாற்றுகை	2014	2013
காணிப் பயிர்செய்கை		
பயிர் செய்யக் கூடியவை (ஹெக்டயர்)	17,499	17,499
பயிர் செய்கை பண்ணப்பட்டவை 31/12	11,280	10,314
பயிர்ச் செய்கை பண்ணப்பட்ட பிரதேசத்தின் சதவீதம் (%)	64%	71%

அறுவடை நிகழ்வுத் திட்டம	2014	2013
அறுவடை செய்யப்பட்ட கரும்பு (மெற்றிக் தொன்)	409,582	510,104
2013 முடியும் தறுவாயில் ஏற்பட்ட அதிகரிப்பு ∴(குறைவு) சதவீதம்	-20%	35%
கரும்பு விளைச்சல் (பலன்)	7.90%	8.34%

சீனி உற்பத்தி	2014	2013
மெற்றிக் தொன்கள	32,364	42,549
வருடமொன்றுக்கு தலைக்கு, (மெற்றிக்தொன்)	6.17	7.57

மனித வளம்	2014	2013
நிரந்தரமான	1,557	1,630
ஒப்பந்த	492	736
அமைய	2,645	2,530
பருவகால	510	685
பயிலுநர்கள்	40	41
மொத்த எண்ணிக்கை	5,244	5,622


இனிப்பான வெற்றியானது
வானத்தைச் சென்றடைவதால்

தவிசாளரின் அறிக்கை



லங்கா சீனி (பிரைவேட்) லிமிடெட்டின் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31இல் முடிவடைந்த வருடத்திற்கான வருடத்திற்கான வருடாந்த அறிக்கையை நிதிசார் கூற்றுடன் ஒன்று சேர்த்து பணிப்பாளர் சபை சார்பாக சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கம்பனியின் மீளாய்வுக்குட்பட்டு வருடமானது உண்மையில், செயலாற்றுகையைப் பாதிக்கும் ஏராளமான பெரும் மற்றும் நுண்பொருளாதாரக் காரணிகளுடன் சவால்மிக்கதாகவே இருந்தது. வருடத்தின் முதல் மூன்று காலண்டுகளின் போது ஏற்பட்டிருந்த கடும் வரட்சி காரணமாக கரும்பு விளைச்சலும் கரும்பு விளைச்சல்வீதமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. இவ்வாறாக, உற்பத்திப் பரிமாணத்தில் இரட்டை விளைவொன்றை ஏற்படுத்தும் விதத்தில் ஹெக்டயர் ஒன்றுக்கான கரும்பு விளைச்சல் 53.82 மெற்றிக் தொன்னில் இருந்து 39.38 மெற்றிக் தொன்னாக வீழ்ச்சியடைந்ததுடன், கரும்பு விளைச்சல் வீதமானது 8.40 சதவீதத்திலிருந்து 7.90 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. கரும்புச் செய்கையின் ஒரு பகுதி நீர்ப்பாசன நிலங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தால், எமது செவனகல பிரிவினால் பலனைச் சாந்தப்படுத்த முடியாது.

பொருளாதாரச் சூழ்நிலை

உலகப் பொருளாதாரத்தில் சாதகமற்ற நிலைகள் காணப்பட்டபோதிலும், 2013ஆம் வருடத்திலான 6.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையால் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் 7.8 சதவீத மொத்த தேசிய உற்பத்தி (புனீ) வளர்ச்சி வீதமொன்றைப் பேணக் கூடியதாகவிருந்தது. இவ்வாறாக இலங்கை மத்திய வங்கியால் மேலும் வட்டி வீதங்களைக் குறைத்துக்கொள்ள குறைந்த மட்ட பணவீக்கத்தைப் பேணவும் முடிந்தது. பொருளாதார வளர்ச்சிக்கான பிரதான பங்களிப்புச் செய்தவையாக விவசாய, கைத்தொழில் மற்றும் சேவை சார்ந்த துறைகள் காணப்பட்டன.

கைத்தொழில் கண்ணோட்டம்

இயற்கையானது கரும்புச் செய்கையை மோசமாகப் பாதித்த போதிலும் கூட, குறித்த வருட காலப் பகுதியில் எம்மால் 32.364 மெற்றிக் தொன் சீனியை உற்பத்தி செய்ய முடிந்ததுடன் அ.்து உள்நாட்டு சீனித் தேவையின் 5 சதவீதமாவுமுள்ளது. அத்துடன், இது உள்நாட்டு சீனி உற்பத்தியின் 62 சதவீதமாகும்.

குறித்த வருடத்தில் சீனியின் விலை பூகோள ரீதியில் மோசமான முறையில் வீழ்ச்சி கண்டிருந்ததுடன், ஜூலை, ஒகஸ்ட் மற்றும் செம்டெம்பர் காலப்பகுதியில் சீனி இறக்குமதியானது பாரியளவில் அதிகரித்துள்ளதுடன் இறக்குமதியாளர்கள் தங்களின் சொந்த இருப்புக்களை மேற்கொண்டிருந்தனர். இது சந்தையில் விற்பனை விலையை வீழ்ச்சியடையச் செய்ததுடன், பெரும் மொத்த விற்பனை வர்த்தகர்கள் நாம் வழங்கிய விலைகளில் சீனியை வாங்கத் தயக்கம் காட்டினர். பின்னர், சீனி மீதான வரிகளை அதிகரித்த போதிலும் கூட, குறித்த விளைவை முற்றுமுழுதாக முன்னர் இருந்த நிலைக்குக் கொண்டுவர முடியாமல் இருந்தது. குறித்த வருடத்தின் பிற்பகுதியில், சீனியின் மொத்த விற்பனை விலைகள் கிலோ கிராம் ஒன்றுக்கு 85 ரூபாவுக்கு கீழ் வீழ்ச்சியடைந்தது.

கம்பனி செயலாற்றுகை

மீளாய்வுக்குட்பட்ட நிதிசார் வருடகாலப் பகுதியில் கம்பனிக்கு வரிக்குமுன்னரான இழப்பாக 211 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது. 2013ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 116 சதவீத வீழ்ச்சியாகும். மோசமான காலநிலையின் நேரடி விளைவால் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி, அதிகளவில் குறைந்த விலைகளில் சீனி இறக்குமதி செய்யப்பட்டதால் சீனியின் விற்பனையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன இலாப வீழ்ச்சிக்கு ஒட்டு மொத்தமாக வழிகோலின. முகாமைத்துவத்தின் எதிர்காலச் சிந்தனையின் ஒரு பகுதியாக இலாபமீட்டல் இருக்கையில் ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, கரும்புச் செய்கையாளர்களுக்கான 75 மில்லியன் ரூபா வரட்சி நிவாரணப் படி மற்றும் 4.7 மில்லியன் ரூபா செலவிலான பதுளை மாவட்ட கரும்புச் செய்கை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை குறுகிய காலத்தில் மோசமான முறையில் இலாப மீட்டலைப் பாதித்தது. எதிர்காலத்தில் நன்மை கிட்டுமென்பதில் சந்தேகமேயில்லை.

மூலதன செலவினம்

எமது பெல்வத்தைப் பிரிவானது, தொழிற்சாலை இயந்திர சாதன மற்றம் உபகரணங்களுக்கென 80.4 மில்லியன் ரூபாவையும், வெளிக்கள இயந்திர சாதன மற்றும் இயந்திரதாதிகளுக்கென 26.7 மில்லியன் ரூபாவையும் கட்டடங்களுக்கென கட்டுமானப் பணிகளுக்கென 7 மில்லியன் ரூபாவையும் முதலீடு செய்திருந்த அதே சமயம் செவனகல பிரிவானது, மோட்டார் வாகனங்களுக்கென 69.6 மில்லியன் ரூபாவையும், தொழிற்சாலை உபகரணங்களுக்கென 7 மில்லியன் ரூபாவையும் முதலீடு செய்திருந்தது.

சேமநலம்

குறித்த வருடத்தில் கம்பனியானது சேமநலத்திற்கென கணிசமன பணத்தொகையைச் செலவிட்டது. பகல்நேரக் குழந்தைகள் காப்பகம் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றைப் பராமரிப்பதற்கென பூரும்பான பராமரிப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கம்பனியானது தொழிலாளர் குடும்பங்களின் சிறார்களுக்கென பாடசாலைப் போக்குவரத்து வசதியையும் வழங்கி வருகின்றது. கம்பனியால் முன்பள்ளி மற்றும் பகல் நேரக் குழந்தைகள் காப்பகம் என்பன பராமரிக்கப்பட்டு வருகின்றன. வரட்சிக் காலத்தின்போது கரும்புச் செய்கையாளர்களுக்கு 75 மில்லியன் ரூபா வெள்ள நிவாரணப் படியொன்று செலுத்தப்பட்டது.

அடையாளம் காணல்

கிராமிய கரும்பு வேளாண்மைச் சமூகத்தை விருத்தி செய்து உயர்த்துவதனைக் கருத்திற்கொண்டும் தேசிய பொருளாதார அபிவிருத்திக்கான பங்களிப்பின் பேரிலும் லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டின் செவனகல பிரிவுக்கு 2014 ஆம் ஆண்டிற்கான தேசிய விவசாய வியாபார விருதுகள் தேவிய விவசாய வியாபார மன்றத்தினால் வழங்கப்பட்டது.

எதிர்கால நோக்கம்

எதிர்பார்த்தளவில் இலங்கைப் பொருளாதாரம் வேகமாக முன்னோக்கிச் செல்வதுடன் அதன் அபிவிருத்தி இலக்குகளையும் அடையுமென எதிர்பார்க்கப்படகின்றது. அரச கொள்கைகளும் வட்டி வீத வீழ்ச்சியும் புதிய முதலீட்டு மாற்று யோசனைத் தேடல்களுக்கென எம்மை வரவழைக்கின்றன. எமது உற்பத்திக்கென திட்டமானப் வியாபாரப் பொருள் சந்தை உள்ளது. சபையானது கரும்புச் செய்கைப் பிரதேசத்தை அதிகரிக்குமாறு தொடர்ச்சியாக கூறி வருகின்றது.

நல்ல பெறுபேறுகளை அடையும் வகையில், தற்போதைய கரும்புச் செய்கையாளர்களை ஊக்குவிப்பதும் இந்தத் துறைக்குப் புதிய செய்கையாளர்களைக் கொண்டுவருவதும் அவசியமாகும். புதிய காணி நிலங்களை உள்ளீர்த்து எமது சொந்த கரும்புச் செய்கை உற்பத்தித் திறனை அதிகரிப்பதும் முக்கியமானதாகும். பிரதான உற்பத்திப் பொருளுக்கு மேலாக, எமது தொழிற்பாட்டின் அதிகூடிய நன்மையை அடைவதற்கு உற்பத்திப் பொருட்கள் மீதான விருத்தி மீதும் எமது கவனத்தைக் குவித்து வருகின்றோம். மணித்தியாலத்திற்கு முறையே 10 மெகாவோட்ஸ் மற்றும் 15 மெகாவோட்ஸ் மின்சக்தியைப் பிறப்பிப்பதற்கும் செவனகல மற்றும் பெல்வத்தைப் பிரிவுகளுக்கான இணைப்பிறப்பாக்கல் கருத்திட்டங்களை நாம் மதிப்பீடு செய்துள்ளோம்.

தகுந்த பாராட்டு

2014ஆம் ஆண்டின் காலப்பகுதியிலும் கடந்த காலத்திலும் தங்களின் அரிய பணிகளையும் பெறுமதிமிக்க பங்களிப்பையும் வழங்கியிருந்த முன்னைய பணிப்பாளர் சபைக்கும் கம்பனியின் முகாமைத்துவம் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

கம்பனியுடன் எப்போதும் கைகோர்த்து செயற்பட்டமைக்காக கரும்புச் செய்கையாளர்கள், வாடிக்கையாளர்கள், சீனி மொத்த விற்பனை வணிகர்கள், வங்கியாளர்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

இறுதியாக குறையேதுமின்றி வெற்றிப்பாதையை நோக்கி கம்பனியைக் கொண்டு செல்வதில் எமக்கு வழி காட்டிவரும் புதிய பணிப்பாளர் சபைக்கு நான் நன்றி பாராட்டுகின்றேன்.

நவின் அதிகாரம

தவிசாளர்
டிசம்பர் 01, 2015.
கொழும்பு.

பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலரின் அறிக்கை



அன்பார்ந்த அனைத்து பங்குதாரர்களே

சூழ்நிலை (சுற்றாடல்)

சீனியின் இறக்குமதித் தீர்வைகள் 2014 நிதிசார் வருடமானது, லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டுக்கு சங்கடம் மிக்கதொன்றாகவே இருந்துள்ளது. அதன் விளைவாக, சீனி மொத்த விற்பனையாளர்கள் உள்நாட்டு சீனிக்கான கேள்வியைக் குறைக்கும் வகையில் பாரியளவில் சீனியைக் கொள்வனவு செய்து குவித்தனர். இவ்வாறாக, லங்கா சீனிக்கம்பனி அந்த விலை இவ்வாறாக, லங்கா சீனிக் கம்பனி அந்த விலைகளுடன் போட்டியிடுவதற்கென தனது விலைகளைக் குறைக்க நேர்ந்தது. குறித்த வருட காலத்தின்போது மெற்றிக் தொன் ஒன்றின் உண்மையான சராசரி விற்பனை விலை 89,441 ரூபாவாக வீழ்ச்சி கண்ணடிருக்கையில் ஒரு மெற்றிக் தொன் சீனியின் விலை 93,250 ரூபாவாக இருந்தது.
வருட முற்பகுதியில் கடுமையான வரட்சி ஏற்பட்டதனால் தொழிற்பாட்டு சூழ்நிலையும் மிகவும் கடினமானதாகவே காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இதன் விளைவாக, கரும்பு விநியோகம் 19 சதவீதமளவில் வீழ்ச்சியடைந்தது. (பாதீட்டுடன் ஒப்பிடுகையில், இது 38 சதவீத வீழ்ச்சியொன்றாகவே காணப்பட்டது.)

மூலோபாயங்கள் மற்றும் நடவடிக்கைகள்

ஹெக்டயர் ஒன்றுக்கான கரும்பு விளைச்சலை அதிகரிக்கும் வகையில், சொட்டு நீர்ப்பாசப் பிரதேசம் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளதுடன் கம்பனியானது தனது 2015 பாதீட்டில் கலமுன கருத்திட்டத்திற்கென 30 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதுடன், 2015 ஜூலையில் கருத்திட்டத்தை ஆரம்பிக்கவுமுள்ளது. அதற்கு மேலாக, விவசாயப் பொருளாதாரத் துறைக்கென மேலும் 12 மில்லியன் ரூபாவும், நீர்ப்பாசன உபகரணங்களுக்காக நியூகிளியஸ் பெருந்தோட்டங்களுக்கென 15 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டன. கரும்பு விநியோகத்தை அதிகரிக்கும் வகையில், நாம் வெளிச் செய்கையாளர் மாதிரியை ஊக்குவித்து வருவதுடன், குறித்த வருட காலப்பகுதியில், கரும்பின் விலை மெற்றிக் தொன் ஒன்றுக்கு 500 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது. இவ்வாறாக, நாம் கரும்புச் செய்கையாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்றைக் காண எதிர்பார்க்கின்றோம்.

உப உற்பத்திப் பொருட்கள்

சீனின் கைத்தொழில் துறையானது சீனி உற்பத்தியில் தனக்குக் கிடைக்கும் குழம்புகள் போன்ற கழிவுப் பொருட்களை சரியான முறையில் முகாமை செய்தால் ஒழிய, அதனால் அதன் உற்பத்திச் செலவைக் குறைக்க முடியாது. மேற்குறிப்பிட்ட குழம்புகளின் பிரதான உற்பத்தியானது மேலதிக சமநிலைப்படுத்தப்பட்ட மதுசாரம் (நுயே) எனப்படும். உள்நாட்டு மதுபான உற்பத்தியாளர்களுக்கு மேற்குறித்த மதுசாரத்தை விநியோகிப்பதன் மூலம் மதுபான இறக்குமதி மீது செலவிடப்படும் அந்நிய செலாவணியை நாடு சேமிக்க முடியும்.
பணிப்பாளர்/ பிரதம .....
குறித்த வருடகாலப் பகுதியில் எமது மேதிக சமநிலைப்படுத்தப்பட்ட மதுசார (நுயே) உற்பத்தியானது 3.57 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. அதன் உற்பத்தி மட்டமும் கரும்பு உற்பத்தி மற்றும் கரும்பு பிழிந்தெடுத்தல் ஆகிய இரண்டுடனும் நேரடித் தொடர்பொன்றைக் கொண்டள்ளது. எனவே, கரும்பு விநியோக வீழ்ச்சியானது மேலதிக சமநிலைப்படுத்தப்பட்ட மதுசார உற்பத்தி வீழ்ச்சிக்கு வழிவகுத்துள்ளது.
லங்கா சீனிக்கம்பனி ஊயசடிழலெ ஹுழைஒனைந ஐ பிழிந்தெடுக்கும் பொருட்டு கைத்தொழில் வாயுக் கம்பனியுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. கைத்தொழில் வாயுக் கம்பனி பிழிந்தெடுக்கப்படும் ஒவ்வொரு ஊயசடிழலெ ஹுழைஒனைந க்குமான 25 ரூபாவை செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கருத்திட்டத்தின் மூலம் வருடாந்தம் ஆகக் குறைந்தது 15 மில்லியன் ரூபாவை நிகர வருமானமாகப் பெற்றுக்கொள்ள நாம் எதிர்பார்க்கின்றோம்.

மனித வளங்கள்

மனோதிடம் மிக்க பணியாளர்களை நிலைத்து வைத்திருப்பதென்பது எமக்கான சவாலொன்றாகவே இருந்து வருகின்றது. பணியாளர் மொத்த எண்ணிக்கையானது 2014 இல் 9 சதவீத உயர்வாகக் காணப்பட்டது. நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு, தொழில்வாண்மைத் தராதரம் பெற்றுள்ள பணியாளர்களுக்கென பிடிமான (பாதுகாப்பு) படியொன்றை பணிப்பாளர்கள் சபை அறிமுகப்படுத்தியது.

வியாபார வள திட்டமிடல் (ERP)

ஐநவீன தகவல்கள் முறைமைகளின் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில், கம்பனி வியாபார வளத்திட்டமிடல் முறைமையொன்றை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளது. எமது எதிர்வு கூறலின் பிரகாரம், மொத்த கருத்திட்டத்திற்கு அண்ணளவாக 150 மில்லியன் ரூபா செலவாகவும். ழீஆவு ஸ்ரீலங்கா நிறுவனத்திடம் செயற்பாட்டுத் தேவை விபரக் குறிப்புகள், விற்பனையாளர் மதிப்பீடு மற்றும் தெரிவு, மென்பொருள் தர உறுதிப்பாடு, கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்குப் பின்னரான மீளாய்வுப் பணிகள் ஒப்படைக்கப்பட்டதுடன், குறித்த கருத்திட்டமானது 2016 ஆம் ஆண்டில் தொடங்கவுமுள்ளது.

எதிர்கால நோக்கம்

எமது சாதனையானது குழாத்தினரின் அர்பணிப்பின் பலனாய் ஏற்பட்டதெனலாம். முன்னாள் பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள், பிரதான தொழிற்பாட்டு அலுவலர்கள், பொது முகாமையாளர்கள் ஏனைய மூத்த முகாமையாளர்கள், ஏனைய மூத்த முகாமையாளர்கள், லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டின் அனைத்து ஏனைய பணியாளர்கள், எமது கரும்புச் செய்கையாளர்கள், ஏனைய சாதன மற்றும் சேவைகள் வழங்குநர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் வங்கியாளர்கள் செய்துள்ள பங்களிப்புக்காக நன்றியுடன் நினைவு கூறப்படுகின்றனர். லங்கா சீனி கம்பனிக்கு 2014 ஆம் ஆண்டானது நம்மை பயக்கும் ஆண்டொன்றாக இல்லாதுள்ள போதிலும் கூட, அவர்களின் பங்களிப்பு, அயரா உழைப்பு மற்றும் உதவி காரணமாக கம்பனியால் நிலைத்திருக்க முடிந்தது. எமது இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடையும் பொருட்டு தங்கள் அனைவரினதும் உதவி எமக்கு எதிர்காலத்திலும் கிட்டுமென நம்புகின்றேன்.

எம். எச். சத்தார்
டிசம்பர் 1, 2015.

லங்கா சீனிக் கம்பனி - செவனகல

தேசிய விவசாய வியாபார விருதுகள்

2014

லங்கா சீனிக் கம்பனி - செவனகல

Was the Proud Winner of

ALL ISLAND GOLD AWARD WINNER

FOR PRODUCER - LARGE CATAGORY





இடர் முகாமைத்துவம்

இடரின் தன்மை	விவசாயம்	நடவடிக்கைத் திட்டம்
செயற்பாட்டு இடர்	கரும்புச் செய்கைக்காக காணி நிலங்களைப் பெற்றுக் கொள்ளல்	◆ கரும்பின் விலையை ரூபாய் 4200/ஹ்ரீ இலிருந்து ரூபா. 4500/ஹ்ரீ வரை அதிகரித்தலர். ◆ கடன் அடிப்படையில் பயிருக்கான முற்பணங்கள் மற்றும் வேறு பொருட்களை வழங்குதல். ◆ அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட உர மானிய மூலமும் கரும்புச் செய்கையாளர்கள் பயனடைந்தனர்.
கடன் இடர்	விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உள்ளீடுகளால் எழும் திருப்பிச் செலுத்தப்படாத கடன்கள	கடன்களை அறவிடுவதற்காக உத்தியோகத்தர்களுக்கு கூடுதல் பொறுப்புக்கள் வழங்கப்பட்டன.
பணவீக்க இடர்	உள்ளீடுகள் மற்றும் அதிகப்படியான செலவுகளின் அதிகரித்த செலவால் இலாபத்திற்கு ஏற்படக் கூடிய தாக்கம்	உற்பத்தித் திறன் அதிகரிப்பு மற்றும் உற்பத்திச் செலவைக் குறைத்தல் ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்துதல
சந்தை இடர்	உள்நாட்டு சீனி விநியோகிப்பவர்களைக் கொண்டு சீனியைக் குறைந்த விலையில் இறக்குமதி செய்தல்	அலகின் அதிகப் படியான செலவைக் குறைப்பதற்கென உற்பத்தி அளவைப் பெருக்குதல்.
சுற்றாடல் சார்ந்த இடர்	யானைகள் மற்றும் காலநிலை மாற்றங்களால் கரும்புப் பயிருக்கு ஏற்படும் சேதங்கள், விளைச்சலில் வீழ்ச்சியை ஏற்படுத்தலாம்.	கம்பனியின் செலவில் யானைக் குழிகள், தடை வேலிகள் மற்றும் மனிதத் தடைகளை அமைத்தல்.


இனிப்பான வெற்றிக்கான,
தெளிவான மார்க்கம

எங்கள் கலாசாரமும் விழுமியங்களும்

எங்கள் விவசாயிகள்

விவசாயியே எங்களது அரசராவார். விவசாயிகளே கம்பனியின் பிரதான மற்றும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பங்குதாரர்களுள் ஒருதரப்பினரென லங்கா சீனிக் கம்பனி நம்புகின்றது. விவசாயிகளால் அநேகமாக அனைத்து காணி நிலங்களும் கரும்புச் செய்கை பண்ணப்பட்டு வருவதனால். செவனகல பிரிவு தங்கள் சொந்த வேளாண்மைக்கென வரையறுக்கப்பட்ட காணி நிலத்தை மட்டுமே கொண்டுள்ளமை அதற்கு பாரதூரமானதோர் காரணியாகவுள்ளது.

ஒரு ஹெக்டயர் நிலத்தில் மேற்கொள்ளப்படும் கரும்புச் செய்கை மூலம் மாதத்திற்கு 35,000 ரூபா சராசரி வருமானமாக மதிப்பிடப்பட்டது. ஏராளமான பிரதேசங்களில் கரும்புச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு குறைநடா தமடம வருமானமே கிடைத்தது. இத்தகைய சூழ்நிலையானது இந்தத் துறையில் ஈடுபடுவதற்கு விவசாயிகளை உற்சாகமிழக்கச் செய்ததெனலாம். பதிலாக, அவர்கள் வேறு பயிர்ச்செய்கைகளை நாடி ஓடினர். இதனை உணர்ந்த லங்கா சீனிக் கம்பனி ஆரம்பத்திலேயே சூழ்நிலையை அடையாளங்கண்டதுடன், விவசாயிகள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கான துணிச்சல்மிக்க நடவடிக்கைகளையும் எடுத்தது. இதற்கு முன்னர், ஒரு மெற்றிக் தொன் கரும்புக்கு 4200 ரூபாவாக இருந்த கொள்வனவு விலையை விவசாயிக்கு தொன் ஒன்றுக்கு 4500 ரூபாவாக உயர்த்தி வழங்கியது. இவ்வாறாக, ஒரு மெற்றிக் தொன் கரும்புக்கு வரலாற்றிலேயே தற்போது ஆகக் கூடிய விலையை வழங்கி வருவது லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் தான். விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் கம்பனியானது அதன் 0 சதவீத இலாபத்தை விவசாயிகளுக்கான உக்குவிப்பு கொடுப்பனவாக ஒதுக்குவதற்குமுகாமைத்துவம் தீர்மானித்தது.

எங்கள் வாடிக்கையாளர்

எங்களது வாடிக்கையாளரே எமது உயரிய எதிர்பார்ப்பாகும். 2 கோடிக்கு மேற்பட்ட மக்கள் எமது வாடிக்கையாளர்களாகவுள்ளனர். அவர்களுக்கு தரமான மற்றும் சேதன சீனியை நியாயமான விலையில் வழங்குவதே எமது பிரதான நோக்கமாகும். இலங்கையர் ஒருவரது ஒரு வருடத்திற்கான சீனி நுகர்வானது 30 தொடக்கம் 35 கிலோ கிராம் வரையே ஆகும். எங்களது உற்பத்திக் கொள்வனவு 6 சதவீதமாக உள்ளதால், மீதியான 94 சதவீத சீனியை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. சீனி இறக்குமதிக்கென வருடந்தோறும் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிட வேண்டியுள்ளது. இது எமது தேசிய வருமானத்தில் பெரும் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எங்கள் பணியாளர்

எங்களது பணியாளரே எங்களது அரிய செல்வமாகும். எந்தவொரு நிறுவனமும் விசுவாசமான மற்றும் ஊக்குவிப்பு அளிக்கப்பட்ட பணியாளர்கள் இன்றி வெற்றிநடை போடுவதில்லை. தொழிற்பாட்டப் பெறுபேறுகள் எமது பணியாளர்களின் அர்ப்பணிப்பு மட்டத்தையே பிரதிபலிக்கின்றதெனலாம். மனித வளமென்பது லங்கா சீனிக் கம்பனியின் கூடிய கவனத்தில் உள்ளது. கடந்த காலங்களில், சீனிக் கைத்தொழில் துறையில் பணியாற்றிய ஊழியர்கள் தங்கள் வாழ்க்கையில் பலவித மனநிறைவற்ற நிலைக்கு, அதாவது தொழில் நியதிகள் மிகக் குறைந்த வருமானம், மிகை ஊதியம் மற்றும் பதவி உயர்வு கிடைக்காமை சம்பந்தமான பிரச்சினைகளை எதிர்நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். இந்தக் காரணிகளைக் கருத்திற்கொண்ட லங்கா சீனிக் கம்பனி, அதற்கு முன்னுரிமை அளித்து பிரச்சினைக்குப் பரிகாரம் தேடத்தொடங்கியது.

நல்லாட்சி

(எங்களது சட்டபூர்வமான கணக்காய்வாளர்களாக ஆளு நுசளெவ ரூ லழரபெ) உத்தரவாதம் பெற்ற கணக்கு வல்லுநர்களே இருந்தனர்.

வெளியக கணக்காய்வாளர்களுக்கு மேலதிகமாக பெல்வத்தை மற்றும் செவனகல ஆகிய இரு பிரிவுகளும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களைக் கொண்டுள்ளதுடன், அவை பிரதம நிறைவேற்று அலுவலருக்கும் தவிசாளருக்கும் நேரடியாகப் பொறுப்புக் கூறியும் வருகின்றன. பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மூவரைக் கொண்ட குழுவானது உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிக்கைகளை கிரமமான முறையில் மீளாய்வு செய்து வருவதுடன் அறிக்கைகளை தாங்கள் கண்டறியும் உண்மைகளுடன் நேர்த்து பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பித்தும் வருகின்றது.

தடைகள்/நெருக்கடிகள

முக்கியமான பிரசவ்சிகைளை இன்னும் தீர்த்துக் கொள்ள வேண்டியுள்ளதால், நாம் அவற்றை எதிர்காலத்தில் முக்கியத்துவம் கொடுத்து தீர்ப்பதில் குறியாகவுள்ளோம்.

பெல்வத்தை மற்றும் செவனகல அமைவிடங்கள் புதிய கம்பனிக்குச் சொந்தமில்லாத அசையும் சொத்துக்களால் முடங்கிப் போயுள்ளன. சட்டபூர்வமான செயற்கிரமங்கள் பூர்த்தியாகும்வரை நாம் காத்திருக்கின்றோம். அவை அகற்றப்படவோ அல்லது இந்தச் செயற்பாட்டில் இணைக்கக் காணி சுவீகரிப்பு செயல்முறை ஆமை வேகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையால் போதியளவு காஒணி நிலங்கள் சுவீகரிக்கப்படும் வரையில் எமது நடுத்தர நியதிகள் மற்றும் நீண்டநாள் திட்டங்கள் என்பவற்றை நாம் நிறுத்தி வைக்க வேண்டியுள்ளது. இந்த நிலை முகாமைத்துவத்தின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும். இலங்கை அரசினால் உருவாக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கான செயற்றிட்ட உபாயங்களை முகாமைத்துவம் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய முதலீடுகளுக்கான நிதியைத் திரட்டுதலே எமது இலட்சியப் பாதையில் நாம் சந்திக்கும் இன்னுமொரு பிரச்சினையாகும். பெல்வத்தை மற்றும் செவனகல பிரிவுகளுக்குரிய காணி நிலங்களின் உரிமம் லங்கா சீனிக் கம்பனியிடம் இல்லாத நிலையில், பெரும்பாலான வங்கிகளோ விசேடமாக சொத்துக்களை ஈடாகக் கேட்கின்றன. எவ்வாறிருப்பினும், திறைசேரி மற்றும் அமைச்சு ஆகியவற்றின் உதவியுடன் குறித்த நிதிகளை ஒழுங்குசெய்யும் செயற்கிரமத்தில் நாம் இறங்கியுள்ளோம்.

பெல்வத்தையில் உள்ள தகவல் தொழில்நுட்ப முறையானது தற்போதைய செயற்பாட்டு இயக்கத்தின் தகவல்களைக் கொண்டுள்ள நிலையில், செவனகலயில் முன்னைய முகாமைத்துவம் ஊழியர்களின் அனைத்துப் பதிவுகளையும் மேற்கொண்டுள்ளது. எனவே, பணிக்கொடைக் கொடுப்பனவுகள் ஏற்பாடுகள் மற்றும் ஊழியர் சம்பந்தப்பட்ட ஏதேனும் வேறு பிரச்சினைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. செவனகல சீனிக்கம்பனியின் முன்னைய முகாமைத்துவத்திடமிருந்து புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான முன் முயற்சிகளை அரசாங்களம் மேற்கொள்ள வேண்டும்.

கணக்காய்வுக்குழு அறிக்கை

கம்பனி ஆட்சி விதிமுறைகளின் பிரகாரம், கணக்காய்வுக் குழுவானது, பணிப்பாளர் சபையினால் ஏற்றவாறு நியமிக்கப்பட்டது. கணக்காய்வுக் குழுவானது, நிதிசார் அறிக்கையிடல், சட்டபூர்வ மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கு இணங்கி ஒழுகுதல், உள்ளகக் கட்டுப்பாடு, சுயாதீன மதிப்பீடு மற்றும் வெளியக கணக்காய்வாளர்களின் செயலாற்றுகை ஆகியவற்றை மேற்பார்வை செய்து பணிப்பாளர் சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான அதிகாரத்தைப் பெற்றுள்ளது. கணக்காய்வுக் குழுவானது பணிப்பாளர்களையும் திறைசேரிப்பிரதிநிதியையும் கொண்டுள்ளது. 2014 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வக் குழுவில் பின்வருவோர் அடங்கியிருந்தனர்.

திரு. டி.வி.வீரசேன - தலைவர்
திரு. திசாத் விஜயகுணவர்தன
திரு. ஆவந்த அமரவீர

குழுவின் வகிபாகம

குழுவானது நல்லதோர் அறிக்கையிடல் முறைமையானது பேணப்பட்டு வருகின்றதென்பதனை உறுதிப்படுத்தும் வகையில் தொழிற்பாடுகள் மற்றும் நிதிசார் கட்டுப்பாட்டு முறைமைகள் ஆகியவற்றை மீளாய்வு செய்து வருவதுடன், இலங்கை கணக்கீட்டு முறைமை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிதிசார் அறிக்கையிடல் ஒழுங்குவிதிகளின் நிதிசார் அறிக்கையிடல் ஒழுங்கு விதிகளின் பிரகாரம், நிதிசார் முறைமைகளில் உள்ள வெளிப்படுத்தல்களின் போதிய நிலை ஆகியவற்றை மேற்பார்வை செய்தும் வருகின்றது. குழுவானது கம்பனியின் உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வுகளைக் கண்காணித்து வருகின்றது. ஷ

உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வானது, இரண்டு கணக்காய்வு அலுவலர்கள் மற்றும் 21 கணக்காய்வு உதவியாளர்களின் கீழ் செயற்பட்டுவரும் பெல்வத்தை மற்றும் செவனகல ஆகிய இரண்டு பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தந்த உள்ளகக் கணக்காய்வுப் பிரிவும் உள்ளகக் கணக்காய்வுக்குப் பொறுப்பான பொது முகாமையாளர் ஊடாக தவிசாளருக்கு நேரடியாகவே அறிக்கையிட்டு வருகின்றன. இது தொடர்பில், குறிப்பிட்ட பணியொன்று மகமாகே அன்ட் கம்பனிக்கு (பட்டயக் கணக்காய்வாளர்கள்) வழங்கப்பட்டிருந்தது.

வெளியகக் கணக்காய்வு

குழுவானது, முகாமைத்துவ செயற்கிரமங்களை முகாமைத்துவப் பிரதிபலிப்புகளுடன் வெளியக கணக்காய்வாளர்களுடன் இணைந்து மீளாய்வு செய்தது. முகாமைத்துவம் குழுவால் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது.
குழுவானது, வெளியகக் கணக்காய்வாளர்களின் நியமனம், மீள் நியமனம் மற்றும் அகற்றுதல் மற்றும் ஒப்பந்த விதிமுறைகள் மீதான பரிந்துரைகளைச் செய்துவருகின்றது.

கூட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்

குறித்த வருட காலப்பகுதியில் குழுவானது இரண்டு (02) கூட்டங்களை நடத்தியது. பிரதம நிறைவேற்று அதிகாரி, பொதுமுகாமையாளர்- நிதி, பொதுமுகாமையாளர் உள்ளகக் கணக்காய்வு மற்றும் பிரதம செயற்பாட்டு அதிகாரிகள் - பெல்வத்தை செவனகல கலந்து கொண்டனர். குறித்த வருட காலப்பகுதியில், குழுவானது, மகமாகே அன்ட் கம்பனியின் காலாண்டு முகாமைத்துவ அறிக்கைகள் உள்ளிட்ட கணக்காய்வாளர்களின் ஐந்து (05) அறிக்கைகளை மிளாய்வு செய்தது. குழுவானது தனது கூட்டங்களின்போது, கம்பனியின் செயற்பாடுகள் திருப்திகரமாக இருப்துடன், அதன் சொத்துக்கள் பாதுகாக்கப்படுவது குறித்த நியாயபூர்வமான உத்தரவாதத்தை வழங்கும் பொருட்டு, நிதிக் கட்டுப்பாட்டுகளை மீளாய்வு செய்தது. அத்துடன், குழுவானது, கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்டபூர்வமான தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுகின்றமை பற்றிய கணக்கு அறிக்கையையும் மீளாய்வு செய்தது. மேலும், பிரதம நிறைவேற்று அதிகாரி, பொதுமுகாமையாளர் - நிதி மற்றும் கம்பனி அலுவலர்கள் பிரசேயகிக் கூடிய இணங்கி ஒழுகல்கள் மீதான செயலாற்றுகை அறிக்கைகளை சமர்ப்பித்தனர்.
கணக்காய்வுக்குழுவானது, பட்டயக் கணக்காய்வாளர்களான மகமாகே அன்ட் கம்பனி கணக்காய்வாளர்களாக மீள நியமிக்கப்பட வேண்டுமென பரிந்துரைத்துள்ளது.

டி.வி. வீரசேன,
தலைவர்,
கணக்காய்வுக் குழு

இனிப்பான வெற்றிக்கான தெளிவான மார்க்கம்



பணிப்பாளர்கள் சபை



தவிசாளர்
திரு.நவின் அதிகாரம



பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
திரு. எம்.எஸ்.ஏ. சத்தார்



பணிப்பாளர்
திரு. திசத் விஜயகுணவர்தன
சட்டத்தரணி



பணிப்பாளர்
திரு.ஆர்.எம்.காமினி ரத்நாயக்க



பணிப்பாளர்
திரு.வின்சன்ட் டயஸ்



பணிப்பாளர்
திரு.டி.வி.வீரசேன



பணிப்பாளர்
கலாநிதி.நிஹால் சமரப்புலி

பணிப்பாளர்களின் சுயவிபரங்கள்

எமது தவிசாளர் திரு.நவின் அதிகாரம

எங்கள் தவிசாளராகிய திரு.நவின் அதிகாரம அவர்கள், கம்பனி நல்லாட்சி, வியாபார நுணுக்கங்கள், அரச நிறுவனச் செயற்பாடுகள் ஆகியவற்றில் பரந்த அனுபவமும் கொண்டவராகவும், சந்தேகமற நிரூபிக்கப்பட்ட தடத்தினைப் பதித்தவராகவும் விளங்குவதுடன், தொலைநோக்கு மிக்கவராகவும் விளங்குவதுடன், தொலைநோக்குமிக்கவராகவும் வெற்றிவகை சூடிவரும் தொழில் முயற்சியாண்மையாளராகவும், இலங்கையிலும் ஐக்கிய அமெரிக்க குடியரசு, ஐக்கிய இராச்சியம் மற்றும் சிங்கப்பூர் உள்ளிட்ட உலக நாடுகளில் பல்லின சுற்றாடல்களில், அமையப்பெற்ற 500 கம்பனிகளில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ நிறைவேற்று அதிகாரியாகவும், ஏராளமான ஊசுஆ முறைமைகள் இணையத்தளம் மூலம் கட்டணம் அறவிடும் முறைமைகள் (ழுஊளு) ரெலிகொம் கட்டணம் அறவிடும் முறைமைகள் மற்றும் ளுனீ மற்றும் ஏயுளு ஆகிய முறைமைகளை நடைமுறைப்படுத்தும், கொடுப்பனவுக்குப் பிந்திய பல் பரிமானங்களிலான சேவைகளிலும் ஆழந்த பரிச்சயமுயைவராவார் அவர் பின்வரும் குழுக்களில் அங்கம் வகித்து வருகின்றார்.

- தென்கிழக்குப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்
- காணி சீர்திருத்த ஆணைக்குழு பணிப்பாளர்
- எமது பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

ஜனாப் மொஹமட் ஹில்மி அப்துல் சத்தார்

எமது பிரதம நிறைவேற்று அதிகாரியான ஜனாப் எம்.எச்.ஏ.சத்தார் அவர்கள், முகாமைத்துவத் துறையில் சேவையாற்றிவரும் தொழில்சார் நிபுணராவார்.

பிரதான திறன்கள்

- முகாமைத்துவம் மற்றும் நிருவாகத்துறைகளில் பரந்த அறிவு
- நடைமுறை நிருவாகத்திலும், நல்லாட்சித் தத்துவங்களில் இற்றைப்படுத்தப்பட்ட அறிவு
- பயனுறுதிமிக்க எழுத்து மூலம் வாய்மொழி மூல தொடர்பாடல் அறிவு.
- ஊடக முகாமைத்துவத்தில் தேர்ச்சி

தொழில்சார் அனுபவம

- பிரதம நிறைவேற்று அதிகாரி - லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் - (2015 பெப்ரவரி தொடக்கம் இற்றை வரை)
- பணிப்பாளர் - பிரிமியர் வுமு20 சிங்கப்பூர்
- ஆலோசகர்
- பணிப்பாளர் - வீடமைப்பு, நிர்மானத்துறை அமைச்சு.
- கௌரவ ஆலோசகர் - அரச வர்த்த அமைச்சு (2002-2004)
- பங்காளர்: வுமுளு ட்ரேடிங், கொழும்பு (1995-2000)
- நிறைவேற்று களஞ்சிய முகாமையாளர் (1989-1993)

பணிப்பாளர் சபை

திரு.திசாத் விஜய குணவர்தன

திரு. திவாத் விஜயகுணவர்த்தன அவர்கள், இங்கிலாந்தில் உள்ள சுநயனபெ பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர். அவர் து.வு.ளு பவர் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டின் பணிப்பாளராக ∴ஆலோசகராகவும் சேவையாற்றி வருகின்றார் அவர் லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிட்டின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு இன்றுவரை சேவையாற்றி வருகின்றார்.

திரு. ஆர்.எம்.காமினி குடா பண்டார ரத்நாயக்க இளம் விஞ்ஞானமானி, முதுவிஞ்ஞானமானி MAKS

திரு. ஆர். எம். காமினி குடா பண்டார ரத்நாயக்க அவர்கள், பேராதனைப் பல்கலைக்கழக (விவசாய சிறப்பு) பட்டதாரியாவார். தைவான் மற்றும் பிலிப்பைன்ஸில் உள்ள காணி சீர்திருத்த மற்றும் பயிற்சி நிறுவன சான்றிதழ் பெற்றவர் நெதர்லாந்தில் உள்ள வைகெனிங்கள் பல்கலைக்கழக விவசாய அறிவு முறைமை முகாமைத்துவத்தில் (ஆயுமுளு) முது விஞ்ஞானமானி பட்டம் பெற்றவர். அத்துடன் ஆசியா மற்றும் பசுபிக்கான ஒருமுகப்படுத்தப்பட்ட மத்திய நிலையம் மற்றும் இந்தியாவில் உள்ள கிராமிய அபிவிருத்தி தேசிய நிறுவகம் ஆகியவற்றின் கூட்டு ஏற்பாட்டில் அசாமில் மாநிலத்தின் குவாஹெட்டியில் உள்ள வரட்சிப் பிரதேசங்களை மையப்படுத்தி நதிமூலப் பகுதிய பயிற்சி சான்றிதழ்.

திரு. டொன் வின்சன்ட் டயஸ்- முன்னாள் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

திரு. டொன் வின்சன்ட் டயஸ் அவர்கள் முகாமைத்துவத்தில் ஒரு வாண்மையாளராவார்.

அனுபவம

- 1975 - பதுளை தொகுதி ஐ.தே.க அமைப்பாளர்
- 1977 - பதுளை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்
- 1983 - பிராந்திய அபிவிருத்தி - பிரதி அமைச்சர்
- 1993 - 1994 - சுயாதீன தொலைக்காட்சி பணிப்பாளர்
- 1994 - தலைவர் / மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்
- 1993 - 2009 - ஊவா மாகாண சபை உறுப்பினர்
- 2015 - பணிப்பாளர் - லங்கா சீனிக் கம்பனி மற்றும் லங்கா சலுசல (சிறப்பு)

திரு.டி.வி. வீரசேன - இளம வர்த்தக மாணி ((டீ-உ முஅ ளிநஉ யைட) கணக்கீட்டு மற்றும் நிதிசார் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா

தொழில்சார் தராதரங்கள்

- இலங்கை அரச நிதிசார் கணக்காளர்கள் சங்கத்தின் இலங்கை கணக்காளர்கள் சேவை உறுப்பினர்
- கணக்கீட்டில் உயர் தேசிய டிப்ளோமா - தொழில்நுட்பக் கல்லூரி
- அரச நிதிசார் முகாமைத்துவத்தில் டிப்ளோமா - ளுடுஜனுயு
- பட்டயக் கணக்காளர்
- தொழில்சார் ஆங்கிலத்தில் டிப்ளோமா - ளுடுஜனுயு
- வியாபாரக் கற்கைகளில் டிப்ளோமா - தொழில்நுட்பக் கல்லூரி

கலாநிதி நிஹால் சமரப்புலி - டீ.ளுஉ (விவசாயத்தில் சிறப்பு) ஆ.ளுஉ (விவசாய விரிவாக்கல்), கலாநிதிப் பட்டம் (பொருளியல்)

கலாநிதி நிஹால் சமரப்புலி அவர்கள், அரச மற்றும் தனியார் துறை ஸ்தாபனங்களில் 35 வருடங்களுக்கு மேலான வேலை அனுபவம் கொண்டுள்ள பொருளியலாளராவார். இவர் ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா.முகவரமைப்பான விவசாய அபிவிருத்திக்கான நிறுவனம் சார் நிதியம் போன்ற சர்வதேச நிறுவனங்களுக்கான ஆலோசகராகவும் கடமையாற்றினார். இவர் பல்வேறு துறைகளில் 300க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தும், வெளியிட்டுள்ளதுடன் இவர் அபிவிருத்தி, கொள்கைப் பகுப்பாய்வு, முதலீடு குறித்த பேச்சு வார்த்தை நடத்தல் ஆகிய துறைகளில் விசேட நிபுணத்துவம் பெற்றுள்ளார்.

தொழில்சார் அனுபவம்

- டோக்கியோ சீமேந்து கம்பனி - கொழும்பு -03 (பணிப்பாளர்- பொருளாதார ஆராய்ச்சி) 2015
- முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு - 2013 -2014
- இலங்கை முதலீட்டு சபை - பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் கொள்கை வகுப்பு) 2001 - 2014
- இலங்கை முதலீட்டு சபை - 1998 - 2001
- இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், அகலவத்தை (விவசாயப் பொருளியலாளர்) 1991 - 1998
- இறப்பர் ஆராய்ச்சி சபை, மத்துகம- (பயிற்சி அலுவலர்) 1981-1991
- மகாவலி அபிவிருத்தி சபை (மண் இரசாயனவியலாளர்) 1979 - 1981

இனிமையான வெற்றிக்கான
வழங்கல் நேரம்



சிரேட முகாமையாளர் குழு மற்றும் தலைமை அலுவலக நிறுவகக் கட்டமைப்பு



தவிசாளர்
திரு.நவின் அதிகாரம



பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
திரு. எம்.எஸ்.ஏ. சத்தார்



சீஓஓ – பெல்வத்த
திரு. பீ.எச்.ஏ.டபிள்யூ. கருணாரத்ன



சீஓஓ – செவனகல
திரு அமுனுகம



ஜிஎம் - பொருள் கொள்வனவு
திரு டபில்யு எம் கருணாரத்ன



ஜிஎம் - பொருள் கொள்வனவு
என் எச நவரத்ன




ஜிஎம் - பொருள் கொள்வனவு
திரு எத ஜயகொடி



முத்த மேலாளர் நில ஆக்கிரமிப்பு
திரு சஹதேவ

நிறுவனக் கட்டமைப்பு - பெல்வத்தை



பெல்வத்தை முகாமைத்துவக் குழு



முதல்வரிசை (இடமிருந்து வலமாக)

திருமதி எம்.ஈ.கொஸ்கஹகும்குர (முகாமைத்துவக் கணக்காளர்) திரு.டி.என்.தயாரத்ன (பிரதி முகாமையாளர் தொழிற்சாலை) திருமதி.எம்.பி.என்.இலங்கக்கோன்(பிரதி முகாமையாளர் தொழிற்பாடுகள்) திரு.விமல் கருணாரத்ன (பிரதம செயற்பாட்டு அதிகாரி), திரு.டி.எல்.டி.ஜயந்த (பொது முகாமையாளர் -வடிசாலை), திரு.எம்.எம்.டி.எஸ்.என்.பெரேரா(பிரதி பொது முகாமையாளர் - விவசாயம்) திருமதி.லில்லி எம் ஹெட்டியாராய்சி (நிறைவேற்று கூட்டாண்மைத் தகவல்)


இரண்டாவது வரிசை (இடமிருந்து வலமாக)

திரு.எஸ்.வீரசேகர (முகாமையாளர் (குழிப்பந்து விளையாட்டுரூ கூடுமிடம்) திரு.ஆர்.எம்.ஜே.பண்டார (உற்பத்தி முகாமையாளர் - வடிசாலை), திரு.டி.ஜே.சந்தரராஜ் (மின்விசைப் பொறியியலாளர் தொழிற்சாலை), திரு.கே.எல்.ஜே.பெர்னான்டோ (முகாமையாளர் - மனிதவளம்), திரு.எச்.எம்.ஐ.ஏ.கே.கட்டுகஹ (உற்பத்தி முகாமையாளர் - தொழிற்சாலை), திரு.கே.விதுரசிங்க (முகாமையாளர் - அறுவடை ரூ கொள்வனவு நிலையம்), திரு.என்.விமலசேன (பிரதம விசாரணை அதிகாரி) திரு.மலிந்த த சில்வா (உதவிப் பொது முகாமையாளர் - மனிதவளம் ரூ நிருவாகம்)

முன்றாவது வரிசை (இடமிருந்து வலமாக)

திரு.எல்.ஏ.சி.பிரசன்ன (முகாமையாளர் - நே)இ திரு. கே.ஏ.ஜீ.எஸ்.சிசிவத் (பொறியியல் முகாமையாளர் தொழிற்சாலை), திரு.டபிள்யூ.எஸ்.கே.ரத்நாயக்க (முகாமையாளர் - காணி அபிவிருத்தி), திரு.டி.எம்.எஸ்.பண்டார (முகாமையாளர் - தொழிற்சாலை), திரு.ஏ.சமாச்சி (பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்), திரு.ஆர்.ஏ.எம்.சந்தன (விவசாயப் பொருளியியலாளர்), திரு.அநுர விஜேசிங்க (முகாமையாளர் - பெருந்தோட்ட தீர்வுகள்), திரு.எம்.பீசந்தன (பிரதம பொறியியலாளர் விவசாய செயலமர்வு)

நிறுவனத்தின் கட்டமைப்பு



செவனகல முகாமைத்துவக் குழு



இடமிருந்து வலகமாக அமர்ந்திருப்போர்

திரு.என்.ஏ.விமலரத்ன (பதில் முகாமையாளர் - உபகரணங்கள்) திரு.ஜே.ஆர்.மலால்கொட (உதவிப் பொது முகாமையாளர் - குடிசார் பொறியியல் சேவைகள்) திரு.டி.கே.டபிள்யூ சில்வா (பிரதி பொது முகாமையாளர்- தொழிற்சாலை) திரு.சீ.ஈ.அமுனுகம (பிரதம செயற்பாடுகள் அதிகாரி) திரு.கே.ர.வோல்டர் (பொது முகாமையாளர்) திரு.எச்.எம்.எஸ்.சமரவீர (பிரதி பொது முகாமையாளர் - விவசாயம்) எஸ்.வி.டி.எஸ்.பிரியந்த (பிரதம பொறியியலாளர்)

வலமிருந்து இடமாக நிற்போர்

திரு.எஸ்.டபிளியூ.கொடித்துவக்கு (முகாமையாளர்- விவசாய விரிவாக்கம்) திரு.பீ.ஏ.கே.நந்ததேவ (முகாமையாளர் - விவசாய விரிவாக்கல்), திரு.எம்.உபுல் குமார (முகாமையாளர் - விவசாய விரிவாக்கம்) திரு.அதுல சிரிதேவ (முகாமையாளர் - விவசாய விரிவாக்கல்), திரு.டீ.சி.ஹெட்டியாராச்சி (பிரதம பொறியியலாளர் - மின்சக்தி ரூ செயலமர்வு) திரு.ஜயந்த பொன்னான்டோ (சிரே'ட முகாமையாளர் மனிதவளம்) திரு.சப்புமால் பிஹிலகெதர (முகாமையாளர் - பெறுகை ரூ சந்தைப்படுத்தல்) திரு.எம்.சாந்த வீரசிறி (உள்ளக கணக்காய்வாளர் விசாரணை அத்தியட்சகர்), திரு.கிங்ஸ்லி பத்திரன (சிரே'ட கணக்காளர்

சுயாதீன கணக்காய்வாளர்கள் அறிக்கை

Ernst & Young
Chartered Accountants
201 De Saram Place
P.O. Box 101
Colombo 10
Sri Lanka

Tel : +94 11 2463500
Fax Gen : +94 11 2697369
Tax : +94 11 5578180
eysl@lk.ey.com
ey.com

எம்பி டீ.சீ / ஆர் டீ / என்டீ / ஏடி

லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் பணிப்பாளர் சபைக்கான சுயாதீன கணக்காய்வாளர்கள் அறிக்கை

நிதிசார் கூற்றுக்கள் மீதான அறிக்கை

31 டிசம்பர் 2014 இல் உள்ளவாறான நிதிசார் நிலை கூற்று, இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய பரந்த வருமானம், சம உரிமைகளிலான மாற்றங்கள் குறித்த கூற்று மற்றும் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமான தகவல்களின் சுருக்கமொன்று உள்ளிட்ட லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டின் (கம்பனி) இதனுடன் சேர்ந்துள்ள நிதிசார் கூற்றுக்களை நலம் கணக்காய்வு செய்துள்ளோம்.

நிதிசார் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தன் பொறுப்பு

பணிப்பாளர் சபையானது ("சபை"), இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் மற்றும் நியாயமான கருத்தைக் கொடுக்கும் இந்த நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படும் தவறான அறிக்கையிலிருந்து விடுபடும் நிதிசார் கூற்றுக்களைத் தயரித்தலை, அயலச்செய்வதற்கு தேவையானதென சபை தீர்மானிக்கின்றவாறான அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டிற்கும் பொறுப்புடையதாகும்.

கணக்காய்வின் நோக்கமும் தராதரமுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படையும

எமது கணக்காய்வை அடிப்படையாகக் கொண்டுள்ள இந்த நிதிசார் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்துவதே எமது பொறுப்பாகும். நாம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கவே எமது கணக்காய்வை நடத்தினோம். ஒழுக்கத்தேவைப்பாடுகளுக்கும் திட்டத்திற்கு நாம் இணங்கி ஒழுகுவதுடன், நிதிசார் கூற்றுக்கள் தவறான அறிக்கையிலிருந்து விடுபடுகின்றனவா என்பது பற்றிய நியாயபூர்வமான உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கே கணக்காய்வை மேற்கொண்டு வருகின்றோம் என்பதை இந்த நியமங்கள் தேவைப்படுத்துகின்றன.

லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டானது பெல்வத்தை சீனி நிறுவனம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 43ஆம் இலக்கம் செயலாற்றுகை குறைந்த நிறுவனங்கள் அல்லது குறைந்த பாவனையுள்ள சொத்துக்கள் குறித்த மீளாய்வின் கீழ் இலங்கை அரசினால் பொறுப்பேற்கப்பட்ட செவனகல சீனிக் கைத்தொழில்கள் லிமிடெட் ஆகியவற்றுக்குச் சொந்தமான சொத்துக்களை முகாமைசெய்துவரும் தொடர்ந்தே இயங்கிவரும் கம்பனியாகும். பொறுப்பேற்றல் செயல்முறையின்போது, சொல்லப்பட்ட சொத்துக்கள் மீதான அசையாச் சொத்துக்களைப் பராமரிக்கும் அதிகாரம் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தகுதிவாயந்த அதிகாரிகளிடம் முறையே பெல்வத்தை சீனிக் கைத்தொழில் நிறவனத்திடமும் செவனகல சீனி கைத்தொழில் நிறுவனத்திடமும் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2012 ஒக்டோபர் 01ஆம் திகதியன்று தகுதிவாய்ந்த அதிகாரிகளிடம் அதிகாரமளிக்கப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டிடம் மாற்றிக் கொடுக்கப்பட்டது. மேலும், தகுதிவாய்ந்த அதிகாரிகளால் மேற்பார்வையிடப்பட்ட சொத்துக்கள் முகாமைத்துவமானது, தாபனத்தை தற்போது நடத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டிடம் மாற்றிக் கொடுக்கப்பட்டது.
தெளிவுபடுத்தப்படாத காரணங்களின் நிமித்தம், ஸ்தூல வடிவத்தில் எடுக்கப்பட்ட சொத்துக்கள் கடப்பாடுகிளல் பெரும்பாலனவற்றுக்கு பொறுப்பேற்றல் திகதியன்றான உறுதிப்படுத்தல் மிதிப்பிடல்களுக்கான ஆவணங்கள் எதுவும் இல்லாதிருந்ததுடன் தகுதி வாய்ந்த அதிகாரிகள் அத்தகைய பெறுமதிகளைச் ஏனைய ஒத்துழைப்பு முறைகள் மூலம் பெறுவதற்கு முனைந்தனர், அவற்றில் சில கணக்காய்வு சான்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. பெற்றுக்கொள்ளப்பட்ட ஆரம்ப மீதிகள் சம்பந்தமான சரி நிலைத்தன்மையின் அதிகமானவை, பின்னர் முகாமைத்துவப் பிரதிநிதித்துவம் மற்றும் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் நுசளெவ ரூ லுழரபெ கணக்காய்வு நிறுவனத்திற்கு வெளிப்படுத்தப்பட்ட ஏனைய கூட்டுக் கணக்காய்வு சான்றுகள் தாபிக்கப்பட்டன.
எவ்வாறிருப்பினும், "அ" மற்றும் "ஆ" ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் இது சம்பந்தமாக கருத்திற்கொள்ளப்படவேண்டியுள்ளன.

ஒரு கணப்காய்வானது, நிதிசார் கூற்றுக்களிலான தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் பற்றிய கணக்காய்வு சான்றைப் பெற்றுக்கொள்வதற்கான செயல்முறை ஆற்றுகையுடன் சம்பந்தப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட செயல்முறையானது, நிதிசார் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்பட்ட சிரமங்கள் குறித்த மதிப்பீடு உள்ளிட்ட கணக்காய்வாளரின் தீர்பிலேயே தங்கியுள்ளன. அந்த ஆபத்து (சிரம) மதிப்பீடுகளை மேற்கொள்வதில், சூழ்நிலைகளுக்குப் பொருந்தும் வகையிலான கணக்காய்வு செயற்கிரமங்களை வடிவமைக்கும் பொருட்டு உண்மையான மற்றும் நியாயபூர்வமான கருத்தைக் கொடுக்கும் நிதிசார் கூற்றுக்களை நிறுவனம் தயாரித்தல் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டை கணக்காய்வாளர் கருத்திற் கொள்வார்.

ஒரு கணக்காய்வு நடவடிக்கையானது, பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுதல், சபையினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயபூர்வ தன்மை மற்றும் நிதிசார் கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக சமர்ப்பித்தலை மதிப்பிடுதல் ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றது.

Partners: A D B Talwatte FCA FCMA M P D Cooray FCA FCMA R N de Saram ACA FCMA Ms. N A De Silva ACA Ms. Y A De Silva FCA W R H Fernando FCA FCMA
W K B S P Fernando FCA FCMA A P A Gunasekera FCA FCMA A Herath FCA FCMA LLB (Lond) H M A Jayesinghe FCA FCMA
Ms. A A Ludowyke FCA FCMA Ms. G G S Manatunga ACA N M Sulaiman ACA ACMA B E Wijesuriya ACA ACMA

A member firm of Ernst & Young Global Limited

எமக்குக் கிடைத்துள்ள கணக்காய்வு சான்றானது, எமது கன்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்குப் போதுமானதாகவும் பொருத்தமானதாகவுமுள்ளது.

அபிப்பிராயம்

அ. 2011 ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க (அ) குறைந்த செயலாற்றுகை மற்றும் குறைந்த பாவனை செய்யப்பட்ட சொத்துக்கள் சட்டம் ("சட்டம்") அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து, கம்பனியானது பெல்வத்தை மற்றும் செவனகல வளாகங்களிடம் உரிமை ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களைப் பொறுப்பேற்றுள்ளது. எவ்வாறிருப்பினும், சேர்த்துக் கொள்ளப்பட்ட சொத்துக்களின் உண்மையான பெறுமதியை அடையாளங்காண்பதற்கான விபரமடங்கிய மதிப்பீடொன்றை கம்பனி மேற்கொள்ளவில்லை. மேலும், கடந்த 2011 நவம்பர் 11ஆம் திகதியன்று முன்னைய உரிமையாளர்களிடமிருந்து பொறுப்பளிக்கப்பட்ட சொத்துக்களை நிர்ணயித்துக் கொள்வதற்கான நிலையான சொத்து பதிவேடொன்று கம்பனியிடம் இல்லை. குறித்த சட்டத்தின் பிரகாரம், கம்பனி இந்த நிதிசார் கூற்றுக்கள் பொறுப்பளிக்கப்பட்ட சொத்துக்களை உண்மைப் பெறுமதியில் அடையாளங் காணுமாறு வேண்டப்பட்டிருந்தது.

மேற்சொன்னவற்றை முன்னெடுக்காமல் பெல்வத்தைப் பிரிவானது, முன்னைய உரிமையாளர்களின் தொடந்துவரும் புத்தக மீதிகளை தங்கள் புத்தகங்களுக்கு எடுத்துக் கொண்டும் அதன்படி மதிப்பிறக்க வீதங்களை ஏற்றுக்கொண்டுமுள்ள அதேவேளை, செவனகல பிரிவோ, சொத்து, இயந்திரதாதி ஆரம்ப பொருட்பதிவேட்டு மீதிகள், சொத்து இயந்திரதாதி மற்றும் உபகரணங்கள் குறித்த மதிப்பிறக்கம் உள்ளிட்ட முன்னைய உரிமையாளர்களிடமிருந்து மாற்றப்பட்ட சொத்துக்கள்.'.பொறுப்புக்களுக்கான கணக்கு எதனையும் கையாளவில்லை.
எனவே, அதன் சொத்து இயந்திரதாதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை மதிப்பிறக்கம் செய்வதில் பாவிக்கப்பட்ட மதிப்பிறக்க வீதங்களின் பெறுமதியை நியாயம் இலாபம் அல்லது நட்டம் குறித்து கூற்றுக்கு அறிவிடப்பட்ட மதிப்பிறக்க நியாயம் ஆகியவற்றை நியாயப்படுத்துவதற்கான போதியளவான கணக்காய்வு சான்றை எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

பெல்வத்தை பிரிவானது, அதன் கட்டடங்கள், இயந்திரதாதி, மோட்டார் வாகனங்கள் மற்றும் விவசாய் உபகரணங்கள் ஆகியவற்றுக்கான விலைமதிப்பு அறிக்கைகளை விலை மதிப்புத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்ட போதிலும், அத்தகைய விலை மதிப்புக்கள் அத்தகைய அறிக்கைகளில் அடங்கியுள்ள தகவல்களில் முகாமைத்துவத்தினால் அடையாளங் காணப்பட்டுள்ள கணிசமான முரண்பாடுகள் காரணமாக இந்த நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை செவனகல பிரிவுக்கு, அதன் கட்டடங்கள், இயந்திரதாதி, பொருள் பதிவு மற்றும் மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றுக்கான விலைமதிப்பு அறிக்கைகள் விலை மதிப்புத் திணைக்களத்திடமிருந்து கிடைத்துள்ள அதே சமயம், அத்தகைய அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள தகவல்களில் முகாமைத்துவத்தினால் அடையாளங்காணப்பட்ட கணிசமான முரண்பாடுகள் காரணமாக இயந்திரதாதிகள் சம்பந்தமான பெறுமதி மட்டுமே இந்த நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
எனவே, 4,048,080,194 ரூபாவைக் கொண்டுள்ள நிதிசார் நிலைமைக் கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள அரசாங்க மானியமானது நியாயபூர்வமான பெறுமதியைப் பிரதிபலிக்கவில்லை என்பதுடன், மேலும், இதற்கு ஆதரவளிப்பதற்கான மாற்று கணக்காய்வு சான்றினை எம்மால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

ஆ. 2011ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க குறைந்த செயலாற்றும் நிறுவனங்கள் அல்லது குறைந்த பாவனை செய்யப்பட்ட சொத்துக்கள் சட்டப் புத்துயிர்ப்பானது, முன்னால் உரிமையாளர்கள் பங்குதார்களுக்கான இழப்பீட்டு நோக்கத்திற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமான பிரச்சினைகளைக் கையாள்வதற்கான மத்தியட்ச விசாரணைக் குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவைக்கு அதிகாரமளித்துள்ளது. பொறுப்பேற்றலின் விளைவாக ஏற்படும் கோரல்கள், கோரிக்கை வேண்டுகோள்கள் மூலமான ஏதேனும் சாத்தியமான பொறுப்பும் லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) விமிடெட்டுடன் அணிசாரா அல்லது தொடர்பற்ற சுயாதீன அமைப்பு ஒன்றான சொல்லப்பட்ட மத்தியட்ச விசாரணைக் குழுவினால் கையாளப்படும். சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட உள்ளடக்கம் தவிர்ந்த எந்தவித ஆவனமும், கோரல்கள் அல்லது சொல்லப்பட்ட சுவீகரிப்பைத் தெளிவாக்கக் கூடிய ஏனைய பொறுப்பு ஆகியவற்றை மதிப்பிடுவதற்கு கம்பனி வசம் இல்லையென்பதை இந்த நிதிசார் கூற்றுக்கள் மூலம் அறிய முடிகின்றது.

அபிப்பிராயம்

எமது அபிப்பிராயத்தின் பிரகாரம் மேலே அ – ஆ இல் குறிப்பிட்டுள்ள நிதிசார் கூற்று விடயங்கள் குறித்த அபிப்பிராயம் தவிர, நிதிசார் கூற்றுக்கள் 31 டிசம்பர் 2014இல் உள்ளவாறாக கம்பனியின் நிதிசார் நிலைமை மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் ஆகியவை குறித்து உண்மையானதும் நியாயமானதுமான கருத்தொன்றை வழங்குகின்றது.

ஏனைய சட்டபூர்வமான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163(02) ஆம் பிரிவினால் வேண்டப் பட்டுள்ளவாறு நாம் பின்வருவனவற்றைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அ. அபிப்பிராயத்தின் அடிப்படை மற்றும் கணக்காய்வின் நோக்கம் மற்றும் வரையறைகள் மேற்குறிப்பிட்டவாறு அமைந்துள்ளன.

ஆ. எமது அபிப்பிராயத்தின்படி கணக்காய்வுக்குத் தேவைப்பட்ட அனைத்து அதகவல்களும் விளக்கங்களுகம் எமக்குக் கிடைத்துள்ளதுடன் எமது பரிசோதனையைப் பொறுத்த வரையில், சரியான கணக்கீட்டுப் பதிவேளுகள் கம்பனியினால் பேணப்பட்டு வருகின்றன.

கம்பனியின் நிதிசார் கூற்றுக்கள், கம்பனிகள் சட்டத்தின் 151ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுகின்றன.

கையொப்பமிடப்பட்டது
(தெளிவின்மை)
27 மே 2015

லங்கா சீனிக்கம்பனி (பிரைவேட்) லிமிடெட்
இலாபம் அல்லது நட்டம் மற்றும் விரிவான வருமானம்
31 டிசம்பர் 2014 இல் முடிவடைந்த வருடம்

	குறிப்பு	2014 ரூபாய்	2013 ரூபாய்
வருமானம்	4	5,539,305,323	5,747,048,373
விற்பனைச் செலவு		(4,904,055,968)	(3,833,756,677)
மொத்த இலாபம்		635,249,355	1,913,291,696
ஏனைய வருமானம் மற்றும் வசதிகள	5	55,818,240	53,278,760
நிருவாகச் செலவுகள		(1,012,541,959)	(724,583,331)
நிதிச் செலவு	6	(50,047,247)	(32,313,316)
நிதி வருமானம	6	160,508,676	136,043,131
வரிக்கு முன்னரான இலாபம் / நட்டம	7	(211,012,935)	1,345,716,941
வருமான வரிச் செலவு	8	60,175,975	(528,888,640)
வருடத்திற்கான இலாபம்/நட்டம்		(150,836,960)	816,828,301
காலப்பகுதிக்கான ஏனைய பரந்த வருமானம்,		59,138,063	48,678,394
நிகரவரி		(91,698,897)	865,506,695
பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியங்கள்/ இழப்பு -	9	(1,508,370)	8,168,283

32 தொடக்கம் 52 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிசார் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமொன்றை உருவாக்குகின்றன.

லங்கா சீனிக்கம்பனி (பிரைவேட்) லிமிடெட்
நிதிசார் நிலைமை குறித்த கூற்று
31 டிசம்பர் 2014 இல் உள்ளவாறாக

சொத்துக்கள்	குறிப்பு	2014 ரூபா	2013 ரூபா
நடைமுறையற்ற சொத்துக்கள்			
சொத்து, இயந்திரதாதி மற்றும் உபகரணங்கள்	10	2,792,377,905	2,183,552,013
நிறுத்திவைக்கப்பட்ட வரி சொத்து	8	86,066,655	1,442,469
		2,878,444,560	2,184,994,482
நடைமுறைச் சொத்துக்கள்			
பொருட்பட்டிகள்	11	1,483,590,602	1,664,308,155
உயிரியல் சொத்துக்கள்	12	428,018,378	416,610,125
வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை	13	54,759,867	58,635,978
முற்பணங்களும் முற்கொடுப்பனவுகளும்		131,039,684	129,350,987
விவசாயிகளிடமிருந்து வருமதியான கடன்கள்	14	930,162,482	764,202,986
முதலீடுகள்	15	1,733,873,465	1,568,902,957
காசும் காசுக்கு சமமானவைகளும்	21	6,851,025	58,983,083
		4,768,295,504	4,660,994,271
மொத்தச் சொத்துக்கள்		7,646,740,064	6,845,988,753
உறுப்பாண்மை மற்றும் பொறுப்புக்கள்			
முதலீடு மற்றும் ஒதுக்கங்கள்			
தெரிவிக்கப்பட்ட முதலீடு	16	1,000	1,000
அரசாங்க மானியம்	17	4,048,080,194	3,554,855,177
பெருகிவளர்ந்த இலாபங்கள்		924,011,372	1,095,710,269
மொத்த சமவுரிமை		4,972,092,566	4,650,566,446
நடைமுறையற்ற பொறுப்புக்கள்			
ஓய்வு நன்மை பொறுப்பு	19	412,697,156	396,335,846
வட்டியுடனான கடன்களும், கடன் வாங்கல்களும்	18	143,104,631	43,713,223
		555,801,787	440,049,069
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வட்டியுடனான கடன்களும் கொடுக்கல் வாங்கல்களும்	18	440,401,880	64,855,479
வர்த்தகம் மற்றும் ஏனைய செல்மதிகளும்	20	1,156,140,806	1,181,460,446
செலுத்த வேண்டிய வருமான வரி		522,303,025	509,057,313
		2,118,845,711	1,755,373,238
மொத்த உறுப்பாண்மை மற்றும் பொறுப்புக்கள்		7,646,740,064	6,845,988,753

.....
பொது முகாமையாளர் - நிதி

இந்த நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்கும் முன் அளிக்கைக்கும் பணிப்பாளர் சபையே பொறுப்பாகும். சபைக்காகவும் சபையின் சார்பாகவும் கையெழுத்திட்டுள்ளோம்.

.....
பணிப்பாளர்

.....
பணிப்பாளர்

32 தொடக்கம் 52 வரையான பக்கங்களில் காணப்படம் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் ஒன்று நேர்க்கப்பட்ட பாகமொன்றை அமைத்துக்கொள்கின்றன.

27மே 2015
கொழும்பு

லங்கா சீனிக்கம்பனி (பிரைவேட்) லிமிடெட்
உறுப்பாண்மையிலான மாற்றங்கள் குறித்த கூற்று
31 டிசம்பர் 2014 இல் உள்ளவாறாக

	கூறப்பட்ட மூலதனம் Rs.	அரச மானியம Rs.	ஒன்று திரட்டப்பட்ட இலாபங்கள் Rs.	மொத்தம் Rs.
2013 ஜனவரி 1ல் உள்ளவாறாக	1,000	3,579,880,177	230,203,574	3,810,084,751
அரச மானிய மீள் கொடுப்பனவு	-	(25,000,000)	-	(25,000,000)
முன்னைய உரிமையாளர் சார்பில் கம்பனியால் செலுத்தப்பட்டது.	-	(25,000)	-	(25,000)
வருடத்திற்கான இலாபம்	-	-	816,828,301	816,828,301
ஏனைய விரிவான வருமானம்			48,678,394	48,678,394
மொத்த விரிவான வருமானம்	-	-	865,506,695	865,506,695
மொத்த விரிவான வருமானம்	-	-	865,506,695	865,506,695
2013 டிசம்பர் 31ல் உள்ளவாறாக	1,000	3,554,855,177	1,095,710,269	4,650,566,446
அரச மானிய மீள் கொடுப்பனவு	-	(774,983)	-	(774,983)
இயந்திரத் சாதன மீள் மதிப்பீடு	-	494,000,000	-	494,000,000
செலுத்தப்பட்ட பங்கு இலாபங்கள்	-	-	(80,000,000)	(80,000,000)
வருடத்திற்கான நட்டம	-	-	(150,836,960)	(150,836,960)
ஏனைய விரிவான வருமானம்	-	-	59,138,063	59,138,063
மொத்த விரிவான வருமானம்	-	-	(91,698,897)	(91,698,897)
2014 டிசம்பர் 31இல் உள்ளவாறு	1,000	4,048,080,194	924,011,372	4,972,092,566

32 தொடக்கம் 52 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிசார் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமொன்றை உருவாக்குகின்றன.

லங்கா சீனிக் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்
காசுப் பாய்ச்சல்கள் குறித்த கூற்று
2014 டிசம்பர் 31இல் முடிவுற்ற வருடம்

தொழிற்படு செயற்பாடுகளில் பாவிக்கப்பட்ட / இருந்தான காசுப் பாய்ச்சல்கள்	குறிப்பு	2014 ரூபா	2014 ரூபா
வரி விதிப்புக்கு முன்பான இலாபம் / (நட்டம்)		(211,012,935)	1,345,716,941
பின்வருவனவற்றுக்கான சரிப்படுத்தல்கள்,			
தேய்மானம்	10	278,540,745	200,080,374
சொத்து இயந்திரவகை விற்பனையிலான நட்டம		-	12,325,714
நிதிச் செலவு	6	(160,508,676)	(136,043,131)
நிதி வருமானம்	6	50,047,247	32,313,316
